## 18 அக்டோபர் 2023 - தினசரி நடப்பு நிகழ்வுகள்

| | |
|---|---|
| **கடல் குப்பைகளால் அன்னிய இனங்களின் படையெடுப்பு அபாயம் அதிகரிக்கும்** | **செய்தி:**<br>• தமிழ்நாட்டின் கடற்கரைகளில் உள்ள கடல் குப்பைகளால் அன்னிய உயிரினங்கள் படையெடுக்கும் அபாயத்தை அதிகரிக்கக்கூடும்.<br><br>**முக்கிய குறிப்புகள்:**<br>• இந்திய கடல் பகுதியில் உள்ள கடல் விலங்குகள் மீது பிளாஸ்டிக் குப்பைகள் (முக்கியமாக உட்கொள்வது மற்றும் சிக்கித் தவிப்பது) ஏற்படுத்தும் தாக்கத்தை முந்தைய ஆய்வுகள் அளவீடு செய்திருந்தாலும், கடல் குப்பைகள் மூலம் உயிரினங்களின் பரவலைத் தூண்டுவதாக கூறப்படும் இதுவே முதல் ஆவணமாகும்.<br><br>• **சத்யபாமா அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த குணசேகரன் கண்ணன் மற்றும் பிற ஆராய்ச்சியாளர்கள்** மேற்கொண்ட ஆய்வை கடல் மாசுபடுத்தல் புல்லட்டின் (Bulletin)என்னும் இதழ் வெளியிட்டது,இதில் 367 **மாசுபட்ட குப்பைப் பொருட்களில் (கடல் குப்பை மாதிரிகள்)** 17 **இனங்கள் அடையாளம் காணப்பட்டன** என்று குறிப்பிடப்பட்டுள்ளது .<br><br>• இவற்றில், தென் அமெரிக்கக் கடற்கரைகளில் வசிக்கும் மைடெல்லா ஸ்ட்ரிகாட்டா(**mytella strigata)** (சார்ரு முஸ்ஸல்ஸ்(charru mussels) அல்லது உள்ளூர் மொழியில் காக்கா ஆழி) என அழைக்கப்படும் உயிரினம் . இது எண்ணூர் மற்றும் பழவேற்காடு சதுப்பு நிலங்களில் உள்ள உள்ளூர் சுற்றுச்சூழல் அமைப்பை ஆக்கிரமித்துள்ளது. மேலும் கேரளாவில் உள்ள வேம்பநாடு உப்பங்கழியில் காணப்படுகிறது . |
| **விண்வெளி தொழில்நுட்பத்தை இந்தியா பகிர்ந்து கொள்ள வேண்டும் என அமெரிக்க நிபுணர்கள் விரும்புகின்றனர்.** | **செய்தி:**<br>விண்வெளி தொழில்நுட்பத்தை இந்தியா பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று அமெரிக்க நிபுணர்கள் விரும்புகிறார்கள் என இஸ்ரோ தலைவர் கூறியுள்ளார். |

| | |
|---|---|
| | • இஸ்ரோ தலைவர் எஸ் சோமநாத் கூறுகையில் அமெரிக்காவில் சிக்கலான ராக்கெட் பயணங்களை உருவாக்குவதில் ஈடுபட்டுள்ள வல்லுநர்கள் சந்திரயான்-3 விண்கலத்தின் வளர்ச்சிப் பணிகளைப் பார்த்த பிறகு விண்வெளி தொழில்நுட்பத்தை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுமாறு என்று கூறினர் .<br><br>**முக்கிய குறிப்புகள்:**<br>• காலம் மாறிவிட்டதாகவும் சிறந்த சாதனங்கள் மற்றும் ராக்கெட்டுகளை உருவாக்கும் திறன் இந்தியாவுக்கு இருப்பதாகவும் சோம்நாத் கூறினார்.<br>• இதன் காரணமாகவே பிரதமர் நரேந்திர மோடி விண்வெளித் துறையை தனியார் நிறுவனங்களுக்கு திறந்துவிட்டார் என்றும் அவர் கூறினார்.<br>• மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் 92வது பிறந்தநாளை முன்னிட்டு டாக்டர் ஏபிஜே அப்துல் கலாமின் அறக்கட்டளை ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் மாணவர்களிடையே அவர் உரையாற்றினார். |
| **அண்ணா பல்கலைக்கழகத்தில் அப்துல் கலாமின் சிலையை ஸ்டாலின் திறந்து வைத்தார்** | **செய்தி:**கலாமின் 92-வது பிறந்தநாள்: அண்ணா பல்கலைக்கழகத்தில் அப்துல் கலாமின் சிலையை ஸ்டாலின் திறந்து வைத்தார்.<br>• அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏபிஜே அப்துல் கலாமின் சிலையை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.<br><br>**முக்கிய குறிப்புகள்:**<br>• அறிவியல் மற்றும் ஆராய்ச்சியில் அப்துல்கலாமின் பங்களிப்பை நினைவுகூரும் வகையில், அவரது 92வது பிறந்தநாளை முன்னிட்டு (அக்டோபர் 15) அவரது சிலையை தமிழக முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்.<br>• படித்து முன்னேறும் இந்த இளம் தலைமுறையின் தன்னம்பிக்கை அப்துல் கலாமின் நம்பிக்கையை நிச்சயம் காப்பாற்றும் என்றும் அறிவியல் பார்வையுடன் உலக |

| | |
|---|---|
| | அரங்கில் இந்தியா சிறந்து விளங்கும் என்றும் ஸ்டாலின் கூறியுள்ளார். |
| **மன்னார் வளைகுடா தீவுகளை காப்பாற்ற செயற்கை பாறைகள்** | **செய்தி:**மன்னார் வளைகுடா தீவுகளை காப்பாற்ற செயற்கை பாறைகள்<br>• மன்னார் வளைகுடா உயிர்க்கோளத்தில் உள்ள தீவுகள் வேகமாக அரிக்கப்பட்டு வரும் நிலையில், அவற்றில் சிலவற்றை செயற்கை பவளப்பாறைகளை நிறுவி மீட்க மாநில அரசு முடிவு செய்துள்ளது.<br><br>**முக்கிய குறிப்புகள்:**<br>• **தமிழ்நாடு கடற்கரை மறுசீரமைப்பு திட்டத்தின்** ஒரு பகுதியாக இந்த திட்டம் மேற்கொள்ளப்படும் என சுற்றுச்சூழல் துறை அதிகாரி தெரிவித்தார்.<br>• இது சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையால் தொடங்கப்படும்.<br>• திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும் தீவுகளின் எண்ணிக்கை இன்னும் இறுதி செய்யப்படவில்லை.<br>• தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு அமைத்த குழு 2009 முதல் 2019 வரை தீவுகளைச் சுற்றி நடத்தப்பட்ட பகுப்பாய்வில் **மொத்த அரிப்பு மற்றும் கூடுதல் சதவீதம் முறையே 42.81 சதவீதம் மற்றும் 35.57 சதவீதம்** என்று தெரிவித்தது.<br>• எனவே, இந்த தீவுகளின் அளவு, வடிவம் மற்றும் இடம் ஆகியவை கணிசமாக மாறியுள்ளன என்று அறிக்கை கூறுகிறது.<br>**உங்களுக்கு தெரியுமா ?**<br>• மன்னார் வளைகுடா உயிர்க்கோளப் பகுதி, ராமேஸ்வரத்திலிருந்து கன்னியாகுமரி வரை தெற்கே 21 தீவுகளை உள்ளடக்கியது.<br>• இதில், சட்ட விரோதமாக பவள சுரங்கம் பணி மேற்கொள்ளுதல் மற்றும் அலைகளின் நேரடி தாக்குதலால், விளாங்குசூலி, பூவரசன்பட்டி ஆகியவை |

| | |
|---|---|
| | நீரில் மூழ்கியுள்ளன. |
| **மாதம் 100 ரூபாய் பணம் பெறுவதற்காக பழங்குடி பள்ளிக் குழந்தைகள் வகுப்பைத் தவறவிடுகின்றனர்** | **செய்தி:**மாதம் 100 ரூபாய் பணம் பெறுவதற்காக பழங்குடி பள்ளிக் குழந்தைகள் வகுப்பைத் தவறவிடுகின்றனர்.<br><br>• மாநிலத்தின் பல பகுதிகளில் உள்ள அரசு பழங்குடி குடியிருப்பு பள்ளி மாணவர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் 100 ரூபாய் நிதியுதவியைப் பெறுவதில் உள்ள முரண்பாடுகள் மாணவர்கள் தனிப்பட்ட முறையில் வங்கிகளுக்குச் சென்று பிரச்சினைகளைத் தீர்த்து, உதவிகளைப் பெற வகுப்புகளைத் தவிர்க்கும்படி கட்டாயப்படுத்தி உள்ளன.<br><br>**முக்கிய குறிப்புகள்:**<br>• மாநில பழங்குடியினர் நலத் துறை பழங்குடியினர்(ST) மற்றும் பட்டியிலிடப்பட்ட சாதி(SC) மாணவர்களுக்கான குடியிருப்புப் பள்ளிகளை நடத்தி வருகிறது. அவர்களுக்கு இலவச கல்வி, உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்படுகிறது.<br><br>• சிறிய நிதியுதவியாக, மாநில பழங்குடியினர் நலத்துறை இந்த மாணவர்களுக்கு முடி வெட்டுதல் மற்றும் பிற சுகாதாரம் தொடர்பான செயல்பாடுகள் போன்ற தனிப்பட்ட பராமரிப்புக்காக மாதம் 100 ரூபாய் வழங்கி வருகிறது.<br><br>• இது நேரடியாக மாணவர்களின் வங்கிக் கணக்கில் மாநில பழங்குடியினர் நலத் துறை மூலம் வரவு வைக்கப்படுகிறது.<br><br>• எனினும், பல்வேறு வகையான முரண்பாடுகள் காரணமாக, கணக்கில் பணம் பெறுவதில் அடிக்கடி சிக்கல்கள் ஏற்பட்டதாக மாணவர்களும், பள்ளி நிர்வாகங்களும் தெரிவித்துள்ளனர்.<br><br>• இதற்கான காரணம் தவறான வங்கிக் கணக்கு, வங்கிக் கணக்கு எண் மற்றும் மாணவரின் பெயர்களைப் ஏற்படும் மாறுதல்கள் பொறுத்து இது மாறுபடுகிறது.<br><br>• இதனால் மாணவர்கள் வகுப்புகளைத் தவிர்த்து வங்கிக்குச் |

| | |
|---|---|
| | செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.<br>• இந்த புகார் தொடர்பாக துறையின் அதிகாரி கூறியதாவது இது தொழில்நுட்ப சிக்கலாக இருந்தால் வங்கிகளுடன் இணைந்து அவற்றை சரிசெய்வோம்.<br>• வேறு ஏதேனும் இருந்தால் இடைவிடாத பணப் பரிமாற்றத்திற்கு நாங்கள் பள்ளி நிர்வாகத்துடன் தொடர்பு கொள்வோம் என்றார். |

***பதிப்புரிமை** © Adda247*

*அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. இந்த ஆவணத்தின் எந்தப் பகுதியையும் Adda247 இன் முன் அனுமதியின்றி மீண்டும் உருவாக்கவோ, மீட்டெடுக்கும் அமைப்பில் சேமிக்கவோ அல்லது எந்த வடிவத்திலும் அல்லது எந்த வகையிலும் மின்னணு, இயந்திர, புகைப்பட நகல், பதிவு செய்தல் அல்லது வேறுவிதமாக அனுப்பக்கூடாது.*